June 1912. Registered No. M. 925.

# செந்தமிழ்ச் செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 2.] பரீதாபி-௵ ஆனி-மீ 1-௳ [பகுதி-3

உள்ளுறை. பக்கம்


அகத்தியர் 339
சைவசித்தாந்தசாதனத்துக்கு விடை 342
அபிப்பிராயம் 343
ஆசாத்திரயம் 343
திருப்பெருந்துறை விளக்கம் 347
இதுவுஞ்சைவசித்தாந்தசாதனமோ 352
விடுகதைக்கு விடை 355
தமிழ்மறையனாதித்துவம் 355
விடுகதைக்குவிடை 357
விடுகதைக்கு விடைவேண்டும் 357
பத்திராதிபரவர்களுக்கு நிரூபம் 358
விடுகதைப்புலவர்களுக்கு விண்ணப்பம் 358
பொருட்கூறியகாலம் 358
அக்ஷராவதானவிடை 324
பத்திரிகை அனுப்பும்படி பாடியது 359
பத்திரிகை வாழ்த்து 359
புத்தகவரவு 360
பலதேசவர்த்தமானம் 361


பத்திராதிபர்:—பண்டிதர், அமிர்தம், சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. தபாற்கூலி அணா. 4.
Copy Right Registered.
வெளிநாட்டுக்கு ரூ. 2. தனி சஞ்சிகை அணா. 2.

லெக்ஷ்மி விலாச பிரஸ், திருச்சி.

# செந்தமிழ்ச்செல்வம்

## ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-2.] பரிதாபி-௵ ஆனி-மீ 1-உ [பகுதி-3


## அகத்தியர்.

(258-ம் பக்கத் தொடர்ச்சி,)

அகத்தியர் தமிழணங்கை வளர்த்த செவிலித்தாய் என முன்னோரிடத்திற் கூறியுள்ளோம். இதனானே அகத்தியர் தமிழைத்தந்தவர் அல்லர் தமிழைவளர்த்தவர் என்பதும் போதரும்.

எம்பெருமானாலும் அவர் திருக்குமாராலும் போற்றிப் பாதுகாத்து வரப்பெற்ற கன்னித்திருத்தமிழைஎமது திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றமெரித்த முருகவேளும் ஆஞ்ஞாபித்தபடி இச்சிவானு பூதிப்பெருந்தகையாகிய அகத்தியரும் போற்றிவளர்த்தனரென்பது போதருகின்றது.

தமிழ் மொழிக்கு இலக்கணவிதிவரம்பமைத்தார் என்பதுந்தெரிகின்றது. அவ்விலக்கணங்கள் பேரகத்தியம்எனவும்சிற்றகத்தியமெனவும் இருநூல்களாக இவ்விருநிலத்திற் பரவிவழங்கினதாகவும் வழங்கிவருகின்றதாகவும் தெரிகின்றது. இவ்விரு இலக்கண நூல்களையும் பற்றிப்பேசத்தொடங்கிற் பெருகிவிரியுமாதலின்ஈண்டவற்றினாய்ச்சியைநிறுத்தி மேற்செல்வாம்.

இலக்கணநூல் செய்யத்தொடங்குவோர்க்குஇலக்கியநூற்களின் பயிற்சியும் உலகவழக்கும் மிகத்தெரிந்திருத்தல் மிக்கவவசியமானதொன்றும்.

நமது அகத்தியர் தமிழ்க்கிலக்கியநூலமைத்தபோது அவர்காலத்துக்கு முன்னிருந்த பெருநாண்மக்கள் செய்துதந்து நிலவச்செய்திருந்த இலக்கியநூல்கள் இலக்கணநூல்கள் ஆகியசெய்யுள்வழக்குகளையும் அக்காலத்திருந்த அறிவான்றபெரியோர்களின் உலகவழக்குகளையும் தம்மாற் கூடியமட்டும்கடவுளருளாற்றானே பயன்றும் திருப்தியடையாமல் என்றும் எங்கும் உள்ளவனும் எல்லாம் உணர்ந்தவனுமாகிய இளம்பிறைசூடிய இறையைத்தவங்கிடந்து வேண்டி முறைப்படி

தாம் உபதேசமுறையாக்கேட்டும் இன்னும் விரிந்துள்ள இலக்கணப் பெருக்கை இறைபவரளித்த இளங்குமாரராகிய சாமிநாதன் பாற்சார்ந்தும் பின்னும் தமிழ்மொழியிற் றெளிவடைந்து பின்னர் தாம் கேட்டவற்றைச் சிந்தித்துணர்ந்து போற்றிப்புகழ்ந்து உலகுய்யமாணாக்கருக்குக்கற்பித்தும் நூற்களியற்றியுமருளினரெனப் பலமுறைகூறியமையால் இவர் தமிழ் மொழியில் மிகவல்லவரென்பது சொல்லாமலே விளங்கும்.

இனிச்சிலர் தமிழின் காலங்களை வகுப்பான் புகுந்து "அக்ஷர காலம்" என்றுகுறித்து அகத்தியர் தமிழ்மொழிக்கு நெடுங்கணக்குவகுத்த காலம் என்று கைகூசாதெழுதுகின்றனர். அந்தோ! அகத்தியர் காலத்திற்குமுன் அக்ஷரம் ஏற்படவில்லையா! அக்ஷரம் இல்லாதிருந்திருப்பின் இவ்வகத்தியனார் சிவபெருமானிடத்தில் தமிழையுந் தமிழ்த்தேயத்தையுஞ் சிறப்பித்த முகத்தே "தொடைபெருதமிழ்நாடு" என்றுகூறுவானேன்.

பாவுக்குறுப்பாவன இன்னதென வகுக்குமிடத்து "எழுத்தசைசீர்பந்தமடி தொடைபா" எனயாப்பிலக்கணக்காரிகையாரும்,

"அவற்றுள், மாத்திரையளவு மெழுத்தியல்வகையுமேற் கிளந்தன்ன வென்மனார் புலவர்." என்றுதொல்காப்பியனாரும் எழுத்தைப்பற்றிப்பாவுக்குத் தொடைக்கு முதலுறுப்பாகக்கூறியிருக்க எழுத்தை ஏற்படுத்தாமல் பாட்டை ஏற்படுத்தினர் என்று கூறுவது? பொருத்தமுடையதாமா? கவிபுனையும் சமத்துடையராயிருந்தார்க்கு எழுத்தேற்படுத்துஞ்சமர்த்தேற்படாதுபோயிற்று? இஃதெனக்கூறுவது அகத்தியர் "அக்ஷரம்" (எழுத்துக்களை) ஏற்படுத்தினவரன்று என்பதே இதனால் விளக்கமாகும் தமிழ்மொழிக்கு எழுத்துக்கள் கடவுளாலேயே அநாதியாகவே அக்ஷரங்கள் ஏற்பட்டிருந்தன வென்பதும் அவரேகுருபரனாகவெழுந்தருளி அநேக ஆன்மாக்களுக் குபதேசித்தருளினர் என்பதும் முக்காலு முண்மை.

அகத்தியர் காலத்துக்கு முன் எழுத்துக்களேற்படவில்லை அகத்தியர் தான்வந்து மண்டிபோட்டுக்கொண்டு எழுத்துக்களுக்கு வடிவமுண்டாக்கினார் என்பது முதலியன வீண் புலப்பாகும். இன்னும் சிலர் சிவபெருமான் டமரகத்திருந்து வலப்பக்கத்தெழுந்த ஒலியை முதலாகக்கொண்டுபாணினிபகவான்வடமொழியெழுத்துக்களையும் இலக்கணங்களையும் வகுத்தனரென்றும் இடப்பக்கத்திருந்தெழுந்த ஒலி

யை முதலாகக்கொண்டு அகத்தியனார் தமிழ்எழுத்துக்களையும், இலக்கணங்களையும் வகுத்தனர் என்றும் கூறுகின்றனர். இதுபோன்ற கிரலத்திற்குஞ்சமயத்திற்கும் தக்கவாறுகிளம்புங்கதைகள்பலவிருக்கலாம். அதைவிவேகிகள் கண்டுணர்ந்து மெய்யைக்கொள்ளாதிரார்.

இதுநிற்க நமது அகத்தியனார்க்கு தமிழில் வன்மை ஏற்பட்டிருந்ததுபோல வடமொழியிலும் வன்மை ஏற்பட்டிருந்திருக்கிறது.

அகத்தியனார் வடநாட்டிலிருந்து வந்தவரென்பது முன்னர் கூறி வந்த நியாயங்களாலும் ஆதாரங்களாலும் புராணகதைகளாலும் விளங்கும். வேதமுதலிய வற்றிற்பயின்று பத்தி அறிவு ஒழுக்கங்களில் பூர்வரினுஞ் சாலச்சிறந்தவராக விளங்கினமையாலன்றோ எம்கண்ணுதற்கடவுள் இவ்வகத்தியனாரைத் தமக்குச்சமமாகக்கூறுகின்றார். இன்னும் காசியிற்கூடிய வடமொழிச் சபையாரோடு இகலிவாது செய்து வென்றாரென்றும் இனோரன்ன பலவற்றைநூற்களின்வாயிலாய்க்கேட்கின்றோமாதலாலும் தமிழில் இவர் இயற்றிய பேரகத்தியம் சிற்றகத்தியம் இரண்டும் வடமொழி இலக்கணத்தைப்பயின்று அதன்போங்காகவே எழுதப்பட்டுள்ளமையாலும் நமது அகத்தியனார் வடமொழிப்புலமையிலும் பாணினிபகவானுக்குச் சமத்துவமுடையவரென்றே துணியப்படுத்துகின்றது.

இனி நமது அகத்தியனார் பதினென்சித்தர்களில்ஒருவர்என்றும் அவர்களில் முதன்மையானவர் என்றும் கொண்டாடப்படுகின்றனர்.

தற்காலத்து புதிதாக எழுதுகின்ற வயித்தியநூல்களும் ஞானநூல்களும் அகத்தியர் பெயரைப்பொறிக்கப் பெற்றெழுகின்றது. இதுதான் பெரும்பாவமுங்கண்ணராவியுமாக இருக்கின்றது. இதனை அவ்வகத்தியனார்தான் நேரிற்கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

நமது அகத்தியனார் வயித்தியமும் ஞானமுமுணராதவரென்று சொல்லவந்தோமில்லை. எமது கடவுளாற்றனக்குச் சமத்துவமுடையவரென்று கொள்ளப்பட்டவர்க்கு வயித்தியமும் மற்றையவும் ஒரு பெருங்கஷ்டமா?

வயித்தியம் சோதிடம் முதலிய எல்லாக்கலைகளையும் ஆதியிடத்திலேயே ஓதியுணர்ந்தவர்; அதிற்சிறிதும்ஐயமில்லை.

இப்பொழுது அகத்தியர் பெயரால் வழங்கிவருவன வெல்லாம் அகத்தியனாரியற்றியதுதானா என்பதுதான்றே யாராய வேண்டியிருக்கின்றது.

ஆராய்ந்த பெரியோர் அச்சிட்டிருப்பதற்குமாறுய் அகத்தியனுரியற்றியதன் றெனக்கின்றனர். இப்பொழுது வெளிவந்துள்ள வயித்திய நூல்களும் இனி உண்டாகப்போகின்ற புதிய வயித்திய நூல்களும் அகத்தியர் பெயர் கொண்டதனுலும் கொள்ளப்போகின்றதாலும் உலகிற் சாமானியர் மயங்குதற்கிடமாகும்.

(இன்னும்வரும்.) பத்திராதிபர்.

---

## இதுவும் சைவசித்தாந்த சாதனமோ.

### இதற்கு விடை.

ஐயா,

நமது நண்பர் மகா-ா-ா-ஸ்ரீ திரு. சாம்பசிவம்பிள்ளை யவர்கள் அடியேன் கருத்தை நன்காராய்ந்து என்னுரையை வேற்றுரை யெனலாம். நான்திருமந்திரத்தை 'நான்மறை' யென்று கூறவேயில்லை. நான் அப்படிக்கூறுவதாக பிள்ளையவர்கள் கூறுகிறார்கள். அதை வேற்றுரை யென்று அவ்வளவு தடிப்பாய் நான் கூற எனக்கு விருப்பமில்லை.

அவர் கூறிய மேற்கோளினபடிக்கு 'திருமூலர்' சொல்லும் திருநான் மறை முடிவும் ஒருவாசகமாயிருந்தால் நான் காட்டிய நியாயங்களின் படிக்குள்ள வேற்றுமை தற்காலம் ஆரிய வேதத்தில் புலப்படுவானேன்?

பதிவருக்க திருத்தொண்டாகிய ஸ்ரீ-ஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் கூறியபடிக்கு-

"காதலாகிக் கசிந்து நீர்மல்கி
யோதுவார் தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாத நாம நமச்சிவாயவே"

என்ற 'நமச்சிவாயக்கருத்தும்' நமச்சிவாய உபதேசக்கிரமமும், நமச்சிவாய அனுஷ்டானமும் ஏன் ஆரியருக்குள் இல்லை? ஏன் தற்கால இருக்காதி வேதத்தில் அந்த அனுட்டான சிவபூஜைபாகாரியமுறைமை ஏன் கூறப்படவில்லை? நமது நண்பர் அடியேன் நிருபம் முழுதும் முடிந்தபிறகு மறுப்போ வேறுப்போ எழுத ஆரம்பித்தால் நலமாயிருக்கும். அவர் இஷ்டம் போல்செய்யலாம். நான் 'மறைமுடிவும்' திருமந்திரமும் ஒருவாசகமென்றுல் திருமந்திரம் நான்மறைவேறுபடலாமோ? வேறுபட்டால் அல்லதுசைவானுட்டானம் உணர்த்தாவிட்டால் அது ஒருவாசகமாமோ.

என்னுடைய 'தமிழ்மறையனுஷ்டித்துவம்' தங்களுக்கு குடைக்கானலுக்கு அனுப்பினேன் அது என் வெளிப்படுத்தவில்லை. முற்றும் வெளிப்படுத்தியபிறகு ஒரு ஆட்சேபனையும் வாராது நான் ஏதோ தற்காலஇருக்காதி நான்மறையில் துவேஷம் வைத்திருப்பதாக அநேக அன்பர்கள் நினைக்கிறார்கள். மேற்கூறிய தேவாரக்கருத்தில்லையேயென்பது தான் என்னுடைய நியாயம். குடைக்கானலுக்கு அனுப்பியபாகம் வெளிப்படுத்தியபிறகு மீதி பாகம் அனுப்புகிறேன்.

'வெற்றுரை' என்ற வெற்றுறை வரைவானேன் இருக்காதிநான்மறை பிள்ளையவர்கள்சொத்தா? திருமந்திரம் என்னுடையசொத்தா? தற்கால இருக்காதி நான்மறை எனக்குடன் பாடுஇல்லையென்று சொன்னேனா? திருமந்திரம் பிள்ளையவர்களுக்குடன் பாடன்று என்றுவெளியிட்டிருக்கிறார்களா? என்னுடைய நிருபத்தில் நான் ஒருவனுரையையும் 'வெற்றுரையென்று கண்டிக்கவில்லையே,

**ஹர. ஷண்முகமுதலியார்.**

---

## அபிப்பிராயம்.

திரிசிரபுரம் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ அமிர்தம் சுந்தரநாத பிள்ளை யவர்கள் நடத்திவருகிற 'செந்தமிழ்ச்செல்வ'மென்னும்பத்திரிகையை வாசித்துப்பார்த்தேன் வாசிக்குந்தோறு மெனக்குப்பெருமகிழ்ச்சியை விளைவிக்கிறது. இவர்களிடையரு முயற்சிசெய்து நீண்டகாலம் நடத்துவார்களென்று நம்புகிறேன். ஸ்ரீ சுந்தரேசர் திருவருள் புரிவாராக.

**மூ. ரா. அருணாசலக்கவிராயர்.**
மதுரை தமிழ்ச்சங்க வித்வான்.

---

## ஆசாத்திரயம்.

(ஆசை.)

ஆசைமுன் றுல்கிற் றென்றி யனைத்தையு மழியா நிற்கும்
ஆசைபொன் மண்பெண்ணென்று மனிதய மிதகற்றுமாந்தர்
ஆசைகளெனும்பேய் வாய்ப்பட் டேவதியுற் றலைவதன்றி
ஆசையோர் சுகமுதல்கா ததர்கிடங் கொடுத்தல் தீதே.

ஆசையே யாதென்ன தென்னும் ஆழியில மிழ்த்திக் கொல்லும்
ஆசையே காலன்றூதர் ஆகவந்திழுத்துச்செல்லும்
ஆசையே கொடியதீவாய் நரகனிற் கிடத்தும் பின்னும்
ஆசையே யாவிபோக்கும் விடத்திலுங் கொடியதாமே.
ஆசையற் றவரே நல்லோர் நிராசை ஆழி சூழுலகின் மேலோர்
ஆசையற்றவரே ஞானி யவர்களே யோகியாவர்
ஆசையற்றவரே ஈசனாருள் படைத்தோர் பின்னும்
ஆசையற்றவரே தெய்வ மாதலினி ராசை நன்றே
ஆசைமூன்றறுத்த பேர்கள் அவனியிற் பெறியராவர்
ஆசை மூன்றகன்றால் நல்ல அறிவது தெளிவே யாகும்
ஆசை மூன்றகன்ற போழ்தெவ் வுலகிலு மனைத்துங் கிட்டும்
ஆசைமூன்றகற்றி நிற்றல் அமிழ்தினு மினியதாமே.

"ஆசா" "இச்சா" முதலியன ஆகாரவீற்று வடமொழிச்சொற்கள். இவை தென்மொழியில் ஐகாரவீற்றைப்பெற்று(மிதிலா = மிதிலை கங்கா = கங்கை. வீணா = வீணை பத்ரிகா = பத்திரிகைஎன்பதுபோல) ஆசை. இச்சை எனத்திரிந்தது. நிற்க இனி ஆசை யென்பதென்னவென ஆராய்வோம்.

ஒருபொருளை கண்டவுடனாவது, ஒன்றைப்பற்றிப் பிறர் கூறக் கேட்டவுடனாவது, ஒன்றை நினைத்தவுடனாவது அதனைப்பெற்றுஅனுபவிக்கத்தூண்டும் எண்ணமே "ஆசை" யெனப்படும்.

பொதுவாய் உலகத்தாருந்து இன்பதுன்பம், லாப நஷ்டம், நியாயா நியாயங்களையுங்கூட கவனியாது தன்னலமே கருதித்தத்தளிக்கும் மனிதரே ஆசையை அபிவ்ருத்திசெய்பவராவர். அதிலும் த்ருப்தியென்பதை அறவேவிட்டவர்களிடம் உள்ள ஆசையே "பேராசை" எனப்படும்.

ஆசைகள் மூவகைப்படும் அவைபொருளாசை, மண்ணாசை, உடலாசை யென்பனவாம். ஒருபொருளினிடம் ஆசைவைத்தால் அல்லது ஒருபொருளைஅடையவிரும்பினால் அதையடைவதற்கான முயற்சியை மென்மேலுஞ்செய்து தெய்வகெதியாகக்கோரியவஸ்துகிடைக்கப்பெற்றாலும் அத்துடன் மனம் த்ருப்தியடைவதில்லை. மேலும், மேலும், துன்பம் பயப்பதும் இன்பத்தைப் போற்றோன்றுவதுமான இன்னும் அநேகம் பொருளின்மேல் ஆசை உண்டாகிறது. இவ்விதமாக மனிதனது ஆயுட்காலமெல்லாம்பின்றொடர்ந்து அழிக்கும்இயல்பினது ஆசை.

ஆசைக்கிடங்கொடுத்தால் ஆசை அதிவிரைவில் பெருகும். அதனால் மனோவலிமையும் தேகவலிமையுங் குன்றிவிடும். ஆனால் ஆசையோ ஓங்கிவளரும், மனிதர்களுக்கோ பிணி, மூப்பு, சாக்காடு முதலியன இயற்கையாயுண்டு. ஆசையினிடத்தோ அவை எட்டியும்பாராது. ஆதலின் இவ்வளவு கேட்டிற்குங் காரணமான ஆசையை எப்பாடு பட்டேனும்ஒவ்வொருவரும் அகற்றமுயலவேண்டும் என்றுபின்வரும்"திருமந்திர"த்தால்வற்புறுத்திய நந்திருமூலநாயனாரின்கருத்து கவனிக்கத்தக்கது.

"வாசியு மூசியும் பேசி வகையினாற்
பேசியிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம் எளிதாமே"

"ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்த மாமே."

பெண்ணாசையால் இராவணன் முதலானவர்கள் அழிந்ததையும் பொருளும், பூமியுமான இராஜ்ய ஆசையால் துரியோதனாதியர் துன்புற்றுமாண்டதையும், இன்னும் அநேகமனிதர்களும், அரக்கர்களும், தேவர்களுங்கூட இவைகளாற்றாண்டப்பட்டு அளவிடற்கரிய துன்பமடைந்ததையும் நினைக்கும் எவரேனும் இந்நிலையற்றதும், துன்பக்களஞ்சியமுமாய பொன், பொருள், உடல், இவற்றில் ஆசைகொள்வரோ! இது பற்றியன்றோநம் ஸ்ரீ தாயுமானவரும் தமது திருவாக்கால்.

"பொருளைப்' "பூவைப்' 'பூவையரைப்'பொருளென்றெண்ணுமொருபாவி, இருளைத் துறந்திட்டொளிநெறியை யென்னுட் பதிப்பதென்று கொலோ, தெருளத் தெருள வன்பர் நெஞ்சந்தித்தித்துருகத் தெவிட்டாத, அருளைப் பொழியுங் குண முகிலே யருளானந்தத்தாரமுதே."

"ஆசையெனும் பெருங்காற்றூடிலவம் பஞ்செனவு மனதலையுங்காலம், மோசம் வருமிதனாலே கற்றதுங் கேட்டதுந்தூர்ந்து முத்திக்கான, நேசமுதல் வாசமும் போய்ப் புலனாயிற் கொடுமை பற்றிநிற்பரந்தோ. தேசுபழுத்தருள்பழுத்த பராபரமே "நிராசை யின்றேற் றெய்வமுண்டோ."

"இப்பிறவியென்னு மோர் இருட்கடலின் மூழ்கி நான்
என்னுமொருமகரவாய்ப்பட்
டிருவினை யெனுநதிரையி னெற்றுண்டு புற்புத
வெனக்கொங்கை வரிசை காட்டுற்
றுப்பிதழ் மடைந்தையர் மயர்ச்சண்டமாருதச்
சுழல் வந்து வந்தடிப்பச்
சோராத வாசையுங் காணுருவானதி
சுரந்த தென மேலுமார்ப்பக்
கைப்பரிசுக்காரர் போலறிவானவங்கமும்
கைவிட்டு மதிமயங்கிக்
கள்ளவங்கக்காரர் வருவரென்றஞ்சியே
கண்ணருவி காட்டு மெளியேன்
செப்பரிய முத்தியாங்கரை சேவுங்கருணை
செய்வையோ சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவானதெய்வமே
தேஜோமயாநந்தமே."

"நேற்றுளரின்று மாளாநின்றரைதனைக் கண்டும்
போற்றிலே நின்னையந்தோ போக்கினேன் வீணேகாலம்
ஆற்றிலேன் கண்டாரந்த வண்ணமேல யளவின்மாயைச்
சேற்றிலே யின்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறியனேனே"

(இன்னும்வரும்.)

கங்கா ஜடேச சர்மா

## பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 339 | 6 | குன்றமெரித்த | குன்றமெறிந்த |
| 340 | 30 | ஒளியை | ஒலியை |
| ,, | 32 | ஒளியை | ஒலியை |
| 341 | 19 | பதினென் சித்தர் | பதினெண் சித்தர் |
| 342 | 7 | வேற்றுரை | வெற்றுரை |
| ,, | 9 | வேற்றுரை | வெற்றுரை |
| ,, | 25 | வேறுப்போ | வெறுப்போ |

# திருப்பெருந்துறை விளக்கம்.

(322-ம் பக்கத் தொடர்ச்சி.)

"குடநாடதன்மிசை" என்ற சொற்றொடரின் பிரயோகத்தைக் கொண்டு "குடநாடு" என்பதற்கு மேலைத்திசையிலுள்ள குடகுநாடு (Coorg) அல்லது கொச்சிநாடென்றும் 'அதன்மிசை' யென்ற பதங்கட்கு அந்நாட்டிலிருந்து அல்லது அந்நாட்டு வழியா யெனப்பொருள் கொண்டும் "Bringing horses through the Kuda nad (or Western lands) he (the Lord) rode dexterously as a horseman" என ஆங்கிலபாஷையில் நமது பிள்ளையவர்கள் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இதுவிஷயத்தில் நமது தமிழ் இலக்கண இலக்கிய வித்துவான்களைக்கொஞ்சமாழ்ந்து கருதுமாறு வேண்டுகிறேன்.

குட்டநாடு, குடநாடு, குடகுநாடு என்ற தொடர்மொழிகள் சேரன் அரசுபுரிந்த குடகுநாட்டையே குறிக்குமென்பது நமதுபிள்ளையவர்கள் கருத்துப்போலும். குடகுநாடு அதாவது கொச்சி (Coorg) என்பது சேரமானிராச்சியம். குட்டநாடு என்றால் பள்ளத்தாக்கான நாடெனப்பொருள்படும், அதுபாண்டிநாட்டைச்சார்ந்த ஓர்பகுதி. குடநாடு என்றால் மேல்நாடு எனப்பொருள்படும், அதாவது கீழ்திக்குக்கு மேல்பாலுள்ள எந்நாட்டையுங்குறிக்கும். குடகுநாடென்றால் கொச்சிநாடொன்றையே சிறப்பாக்கக்கொள்ளப்படும்; ஆனதால் குடநாடு என்ற தொடர்மொழிகளுக்கும் குடகுநாடு என்ற தொடர் மொழிகளுக்கும் பொருளொற்றுமைகொஞ்சமுமில. குடக்கு என்றால் மேற்கு எனப்பொருள்படும் "குடக்குவாருணமே மேற்குக்குறித்தபச்சிமமே மேற்காம் நடத்திய பிரத்தியக்குமற்றதன் பேரேநாட்டும்" என்பது நிகண்டுச்சூத்திரம்; ஆனதால் குடக்கு + நாடு-குடநாடு எனத் "திசையொடு திசையும்பிறவுஞ்சேரின் "எனும் நன்னூற் சூத்திர விதிப்படி குடக்கு எனும்மொழியிலுள்ள ககரவொற்றுங் ககர உகரமுங்கெட்டு குடநாடு எனவாயிற்று. இவ்வாறே குடக்கு + திசை குடதிசையெனவும் குடக்கு + கானல் = குடக்கானல் எனவும் வழங்கும்; இதுபோல கொச்சி நாட்டைக்குறித்துச்சொல்ல வேண்டுமானால் குடகு + நாடு குடகுநாடு, குடகு + தேசம் = குடகு தேசம், குடகு + இச்சிலி குடகுக்கிச்சிடிகள் என ஆமேதவிற குடநாடு, குடதேசம் என ஆமென்பதற்கிலக்கிணமிலதுமேற்குத்திக்கையிலக்கிய நூல்களிற்குறிக்கும்போதெல்லாம் குடக்கு எனும் பதத்தையே ஆன்றோர்கள் பெரும்பான்

மையாண்டுவந்திருக்கிறார்கள். பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திநாயனார்புராணத்தில் ஆளுடையபிள்ளையார் திருவையாற்றை நீங்கி காவிரிநதிக்கரையிலுள்ள மேலத்திசையிலுள்ள மற்றைய சிவதலங்களைத் தரிசிக்கச் சென்றதாகக் கூறுமமையத்தில் "குடதிசை மேற்போவதற்குக் கும்பிட்டங்கருளப் பெற்றுக் குறிப்பினொடும் படருநெறிமேலணைவாரென்றும், திருமூலநாயனார் புராணத்தில் திருவாவடுதுறைச் சிவாலயத்தினுள் திருமூலர், பிரகாரத்தில், மேலத்திக்கில் சிவயோகத்தமர்ந்திருந்ததாகக் கூறுமமையத்தில் "மேவுவார் புறக்குடபால மிக்குயராத வரசின்கீழத் தேவிருக்கையமர்ந்தருளி யென்றும் சங்கப்புலவர் வாக்காகிய திருமுருகாற்றுப் படையில் மதுரைமா நகரத்துக்கு மேற்றிசையில் திருப்பரங்குன்றமெனுந் தலமிருப்பதைச் சொல்லுமமையம் "கூடற்குடவயின்" என்றும் ஆன்றோரருளி யிருப்பதே சான்றாக விருக்கின்றது இன்னம் பலமேற்கோளுள விரிவஞ்சி விடுத்தாம். இதனால் ஸ்ரீவாசகத்தில் குடநாடு எனும் பிரயோகத்திற்கு மேல்நாடு எனவே பொருள் கொள்ளுதலமை வுடைத்து. பண்டைய காலத்தில் ஒவ்வோரிராச்சியத்தையும் கீழ்நாடு, மேல்நாடு, எனவும் மருகலநாடு, கொண்டலநாடு, குறுகளகநாடு, நாங்கூர்நாடு, மிழலைநாடு, கோனாடு, மழலைநாடு, என்பன வாதியாகப் பகுத்து வழங்கப்பட்டு வந்திருக்கிறது சில பெரிய ஊர்களையுங் கீழையூர் மேலையூரென்று ஆதிகாலந் தொட்டே பகுக்கப்பட்டு இன்னமுமப்பெயரால் வழங்கியும்வருகிறது அதுபோலவே நம் பாண்டிநாட்டை மேல்நாடு, கீழ்நாடு, என முறையேபொருள்படும் குடநாடு குளநாடு எனப்பகுத்து வழங்கி வந்திருப்பதாகத் தெரிகிறது திருப்பெருந்துறை மதுரைக்குக் கீழ்பாலுளதென முந்தியே பல பிரபல பிரமாணங்களாற் காட்டினோம் கீழ்திக்கை நோக்கியே வாதபுரீஸ்வரர் குதிரைகொள்ளச் சென்றதாகவும் பல்லடமொழி தென்மொழிக் கிரந்தங்களாலுங் காட்டினோம் ஆனதால் கீழ்திக்கிலுள்ள திருப்பெருந்துறையினின்று குடதிசையில் மதுரைமாநகரத்தில் பாண்டியன்முன்பு குதிரைகளைநடாத்தின சிவபெருமானது லீலையையேசிவவாக்கியங்கள்கூறிக்கும்'**அதன்மிசையெழுந்தருளியும்**' எனமேல்வாக்கியத்தில் அருளப்பட்டிருக்கிறது மிசையெனுஞ்சொற் பிரயோகத்தையும் தன் பொருளையும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும் "மிசையென்ப துணவுமேடு மீமிசைச்சொல்லு முப்பேர்" என்பதுநிகண்டு. தவிர மிசையெனுஞ்சொல்லும் வேற்றுமையிடப்பொருளுடன் இடைச்சொல்லாகவும் ஆன்றோரிலக்கியங்களிற் பிரயோகிக்

இப்பட்டிருக்கிறது "மலர்மிசை யேகினான்" என்பதற்கிய வுதாரணம். ஆனதால் குடநாடதன்மிசை யென்ற விடத்துக் குடநாட்டின்மேல் அதாவது குடநாட்டில் எனப் பொருள்படுமே யொழிய குடநாட்டிலிருந்து அல்லது குடநாட்டுவழியாயென ரு-ம் வேற்றுமைப்பொருளை ஒருபோதும்பயவா. ஆங்கிலபாஷா கல்விமானும்தமிழ்ப்பஞ்சவிலக்கணவித்துவானும் புறமதத்தவருமான ரெவரண்டு போப்பைய ரவர்களும் "குடநாடதன்மிசை" யென்ற வாக்கியமடங்கிய செய்யுளுக்கு அடியில் கண்டவாறு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

"Bringing horses in the Western land,
"Right royally He rode in state

இம்மொழிபெயர்ப்பில் மிசையென்றசொல்லுக்கு In என்றஆங்கிலமொழியை உபயோகித்திருக்கிறார்கள், மிசையென்றதைப்போல் In என்ற ஆங்கில மொழியும் இடப்பொருளைத் தரும் ஆங்கிலபாஷா இடைச்சொல்லானதினா லென்றறியவேண்டும். நமது பிள்ளையவர்கள் மிசையென்றசொல் ஆங்கிலபாஷையில் Through எனுஞ் சொல்லின் பொருளைப் பயப்பதாகத் தவறுதலாகக்கொண்டு இவ்வாக்கியங்களுக்குமொழிபெயர்த்து நம்மவரை மயக்கத்துக் குள்ளாக்குகிறார்கள். In என்ற சொல்லும் Through என்ற சொல்லும் ஒன்றுக்கொன்று மிக வித்தியாசமானபொருளைக் கொடுக்குஞ் சொற்களென்று இங்குவிரித்தெழுதுவது நாவசியம் கற்றோர்களறியவேண்டும். இன்னொரு விடயமிங்கு கவனிக்கத்தக்கது. மாணிக்கவாசகர் பொருட்டு மதுரைமாநகரத்தில் பாண்டியன் சமுகத்தில் குதிரைகளைத் தான்கொண்டு வருவதாகக் குருமூர்த்திகள் மொழிந்தருளினர். அவ்வார்த்தைக் கிணங்கக் குதிரைகள் கொண்டுவரப்பட்டு நடாத்திக்காட்டப்பட்டது. இதை தான் மாணிக்கவாசகப்பிரான் 'குதிரையைக்கொண்டு குடநாடதன் மிசைச் சதுர்படச்சாத்தாய்த் தானெழுந்தருளியும்' என வருளியதாகக்கொள்ளவேண்டும். இவ்வாறு பொருள் கொள்வதை விட்டுவிட்டு குடகுநாட்டில் அதாவது கொச்சிதேசத்தில் கடவுள் குதிரைகளோடு எழுந்தருளினாரென்றால் அங்கு யார்பொருட்டு எதுக்கு அவ்வாறு எழுந்தருளவேண்டும்? அங்கெழுந் தருளியதில் மாணிக்கவாசகருக்கும் பாண்டியபூபதிக்கும் யாதுபிரயோஜனம்? மதுரைமாநகரத்துக்கு குதிரைகளோடு வந்ததாகக் கூறினாலல்லவா சரித்திர நுணுக்கத்துக்குப் பொருளொற்றுமைப்படும். இத்தியாதி காரணங்களினால் பிள்ளையவர்கள் கொண்டபொருள் திருவாசகச்செய்யுட் கருத்துக்குப் பொ

ருத்தமற்றது. இலக்கண இலக்கிய நூல்கட்கும் மாறுயுள்ளது. இது நிற்க ஸ்ரீவாதபுரீஸ்வரர் கீழ்ச்சமுத்திரக்கரையைநோக்கிக்கீழ்த்திசை யாய்ச் சென்றுரெனப் புராதீன நூன்முகமா யெவ்வாறு கண்டனமோ அவ்வாறேகீழத்திசையிலிருந்து அதாவது திருப்பெருந்துறையெனும் ஆளுடையார் கோயிலின் பக்கத்திலிருந்து சிவபெருமான் குதிரைக ளோடுபுறப்பட்டு உலகோர்க்குத் திருவிளையாட்டுக் காட்டிக்கொண்டு மதுரைமாநகரம் வந்து குதிரையேற்றங் காட்டியதாகப் புராதீன நூல் கள் கூறுகின்றன. பெரும்பற்றப்புலியூர் நம்பியாரியற்றிய திருவிளை யாடற்புராணம் உ அ-வது நரிகுதிரையான திருவிளையாடல் கக-வது செய்யுள்வருமாறு "ஒழுக்கந்தருமந்த வந்தானமுறவுவாய்மையொரு மைமற்றும், விருப்பமுள்ள சூத்திரர்வாழ் மிழலைநாட்டு நரியெல்லாம், அழைத்துத்தெருட்டி விளையாடலவனிமீதுநனிவிளங்கத், தழைத்தத் தலத்தை நரிக்குடியென்றின்றுஞ் சொல்வர்சான்றோரே." என்பதே இச்செய்யுளில் கூறப்படும் நரிக்குடியெனுந்தலம் ஆளுடையார்கோவி லுக்குத் தென்புறஞ் சமீபத்திலுளது. இவ்விடம் பூர்வத்தில் பாண் டியதேசத்தின் பகுப்பாகிய மிழலைநாட்டைச் சார்ந்தது. இங்கிருந்து தான் குருமூர்த்திகள் நரிகளைத் திரட்டச்செய்து பரிகளாக்கி அங்கி ருந்து நடாத்திவந்து ஓரிரவு மத்தியில் தங்கி மறுநாள் திருவாதவூர் மார்க்கமாய் மதுரைமாநகரஞ் சேர்ந்ததாகப் புலவர்கள் சொல்லுகின் றனர்.

நரிக்குடிக்குப் பக்கத்தில் பரிவீரமங்கலமென ஓர் க்ஷேத்திர முண்டு. இங்குத்தான் சிவபெருமான் குதிரைவீரராகவெழுந்தருளிய தென ஆன்றோர் தொன்றுதொட்டுச்சொல்லிவருகிறார்கள். இவ்வாறு குதிரைக்கூட்டங்களுடன் குருமூர்த்திகள் திருவாதவூரண்டை வரு கையில் பாண்டியனது தித்தண்டம் பொறுது வருந்துந் தம்முடைய மெய்யடியாராகிய மாணிக்கவாசகருக்கு இதோவந்தோம் இதோ வந் தோம் என உறக்கக் கூறினர்போற் றமது திருப்பாதச் சிலம்பொலி யைக் கணீர் கணீரென்று;பல்லோருமறிய வொலிப்பித்துக் காட்டிய தாயும் புராணங்கூறியுளது. இவ்வாறு உலகினர் சான்று பகரக் குதி ரைவீரராய்க் கடவுள் அருட்கோலத்திருமேனி கொண்டெழுந்தருளி னதைத்தான் 'நரியைக்குதிரைப்பரியாக்கி ஞாலமெல்லாம்நிகழ்வித்து' எனவும், சிலம்பொலி காட்டினதை "வாதவூரினில் வந்தினிதருளிப் பாதச்சிலம்பொலி காட்டியபண்பும்" எனவும், ஸ்ரீவாசகத்தில் நமது ஆளுடையார் வள்ளலார் புகழ்ந்து கூறினர். பாதச்சிலம்பொலி காட்

டியதை நம்பியார் திருவிளையாடற்புராணம் உஅ-வது படலம் கக-வது செய்யுளினு மெடுத்தாண்டிருக்கிறது. அச்செய்யுள் வருமாறு "ஆதரவடியார்முந்து மடிபணிந்தேதத்தப்போந்து, வாதையம்புரத்துநண்ணி மணிச்சிலம்போசைகாட்டத், தீதறவாண்டவெந்தை திருச்சிலம்போசையென்றே, யேதமா முனிவர்தேறி யிசைபடத் துதிக்கலுற்றார்" என்பதே. திருவாதவூர் மதுரைமாநகரத்துக்கு வடகுணக்கிலுள்ளது இத்தலம் வாதபுரீஸ்வரர் அவதாரஞ்செய்யப்பெற்றது.

இவைகளினால், ஆளுடையார் கோயிலுக்குப்பக்கலிலுள்ள மிழலைநாட்டின் கண்ணிருந்து, மாணிக்கவாசகரை அடிமைகொண்டதைப் பல்லோருக்குங்காட்டினார் போனதும் உண்மையடியார்களையெல்லாம் இவ்வாறே தாம் தொழில் செய்தும் அடிமை கொள்பவரென்பதை உலகினர்க்கு விளக்கினார் போனதும் நம்மருமைக்கடவுளார் ஓர்திருவிளையாட்டாக நரிகளைப்பரிகளாக்கி ஊர்தோறும் நடாத்திவந்து மதுரைமாநகரத்தைச்சார்ந்து பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றிய பெருந்துறையாளரது அற்புதச்சரித்திரத்தைக் குடகுநாட்டில் நடந்ததாகநம்நண்பர் கூறுங்கூற்றெத்தன்மைத்தெனில் தினகரனுதிக்குந்திசையைக் குணதிசையெனக்கூறவேண்டாம் குடதிசையெனக் கூறுங்களென நம்மவருக்குப் போதிக்குந்தன்மை போலாம். ஸ்ரீவாசகத்தில் குடநாடு என்றது மதுராபுரிவிளங்கும் பாண்டியநாட்டின் மேல் பகுதியையே குறிக்குமென்பதற்குப் பின்னுமோர் மேற்கோள் காட்டுவாம் பழய அதாவது சுந்தரமாமுனிவரியற்றிய திருப்பெருந்துறைப்புராணமொன்றுளதென முன்னரே கூறி அதிலிருந்து சிலமேற்கோளுங் காட்டினோம் அப்புராணத்தில் மாணிக்கவாசகசுவாமிகளுக்குத்தலங்கடோறுங் காட்சிகொடுத்த சருக்கத்தின்-க-வதுசெய்யுள் வருமாறு "திருந்துவகருணைப் பெருந்துறைசிவனா ரன்பர்தமக்காகப் பொருந்துங்குதிரைகொண்டுகுடநாட்டின் மதுரைப்புரவலனுக் கிரும்பொற்கயிறுமாறியளித்தெழில்சேர்வைகை மண்சுமந்து பிரம்புற்றிடு மெய்யடியை யெங்கும் பெறுகத்தாங்கிப்பயந்தபின்பு" என்பதே இச்செய்யுளில் மதுரைமாநகரத்தைக்குறிக்குங்கால் குடநாட்டின்மதுரையென்றார், குடநாடு என்பதற்கு இங்குமேல்நாடு எனவே பொருளல்லவா? இதினால் திருப்பெருந்துறை யெனுந்தலம் மதுரைமாநகரத்துக்குக்கீழ்நாட்டிலுளதென அர்த்தாவர்த்தி நியாயத்தால் பொருள்படுகிறது. இதுகாறுங் காட்டிய பற்பல பிரமாணங்களடங்கிய நியாயத்தால் குதிரையைக்கொண்டு குடநாடதன்மிசைச் சதுர்படச் சாத்தாய்த்

னெழுந்தருளியும், என்ற ஸ்ரீவாசகச் செய்யுள் கீழ்திக்கிலுள்ள ஆளுடையார்கோயிலென்னுந்திருப்பெருந்துறையிலிருந்துமேல்பாலுள்ள மதுரைமாநகரத்துக்குச் சிவபிரான் குதிரைவீரராகவெழுந்தருளினதையே குறிக்குமெனப்பசுமரத்தாணிபோல் எவ்வகையானும் அசைக்கவுங் கூடாவிதமாய்நாட்டப்பட்டது. இவ்விடயமாயினியும்ஆசங்கையுறுவோர் நமக்கெழுதுவாரென நம்பப்படுகிறது இனிமேல்விடயத்தை ஆராயப்புகுவாம்.

(இன்னும்வரும்.)

திரு. சாம்பசிவம் பிள்ளை
Retired Sub-Magistrate, Trichy.

## இதுவும் சைவசித்தாந்த சாதனமோ.

(318-ம் பக்கத் தொடர்ச்சி.)

எனவும் "தமிழ்ச்சொல்வடசொலெனுமிவ்விரண்டும் உணர்த்துமமலனை யுணரலுமாமே" எனவும் அருளப்பட்டிருப்பதில் ஆரியத்தையுந் தமிழையு மொரேகாலத்தில் பரமேசுவரன் பார்வதி அம்மையாருக்கருளியதாயும் இவ்விரு பாடையினாலும் சிவபெருமானை யறியலாமென்றும் பொருள்படக் கிடக்கின்றதன்றோ. கலியுகஆரம்பத்தில்அவதரித்து சைவசித்தாந்த மததாபிதராய் விளங்கிய ஸ்ரீமந் மாணிக்கவாசகப்பிரபு திருவாய் மலர்ந்தருளியஸ்ரீவாசகத்தில் "பாசமாம்பற்றறுத்துப் பாரிக்குமாரியனே" எனவும் "நந்தம்பாடியி னான்மறையோனா யந்தமிலாரிய னாயமர்ந்தருளியும்" எனவும் "பேராசை யாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய்" எனவும் சிவபெருமானை ஆரியனெனவும் அந்த ஆரியன் நான்மறையோனெனவும் அருளினார்கள். "ஆரியர் மிலேச்சர் நல்லோர்" எனத்தமிழ்நிகண்டுக்காரரும் இப்பதத்தை யெடுத்தாண்டிருக்கிறார்கள்.

ஆளுடையபிள்ளையார் தாமருளிய திராவிட சுருதியில் "தமிழ்ச்சொல்லும்வடசொலுந்தாணிழற்சேர" எனவுந்திருஞானசம்பந்தமூர்த்திகளாகிய மூவர் முதலிகளுள் திருநாவுக்கரசுகளியற்றிய ௪-௫-௬ திருமுறைகளில் "ஆரியந்தமிழோடிசையானவன்" எனவும், ஆரியன் கண்டாய்தமிழன்கண்டாயெனவும் "செந்தமிழோடாரியனை" யெனவும் "வடமொழியுந் தென்றமிழு மறைகணான்குமானவன்காண்" எனவும் ஆரியத்தையுந்தமிழையுமொக்கவே ஒரேதட்டினிலனுவளவு மேற்ற

த்காழ்ச்சியின்றிவைத்திருப்பது தமிழ்மறை வல்லசைவர் பல்லோரு மறிந்தவிடயமே இவ்வாறின்னம் பலஉத்தமமானபிரமாணங்களுடன் பிரகாசித்துக்கொண்டு விளங்கும் ஆரிய வேதத்தைச் சைவமார்க்கத் துக்குப் புறம்புபோல் நம் நண்பர் ஏன் கருதினார்களோ தெளிவாக விளங்கவில்லை. மேலும் சைவ சமையாசாரியர்களி லொருவராகிய சுந் தரமூர்த்திநாயனாரால் திருத்தொண்டத் தொகையில் 'பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்' எனத்து இபெற்ற கடைச்சங்கப்புலவர் களால் திருக்குறளுக்குக் கொடுத்த சிறப்புப்பாயிரத்தில் "ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந்திதனினிது சீரியதென்றொன்றைச் செப்பரிதாம் ஆரியம் வேதமுடைத்துத் தமிழ்த் திருவள்ளுவர் மொழிந்த வோது குறட்பாவுடைத்து எனுமோர் திருவெண்பா காணப்படுகின்றது ஆரி யத்தையுஞ் செந்தமிழையு மாராய்ந்தால் இரண்டினுள்ளுமின்னதேற் றமுடையதெனச் சொல்லமுடியா இரண்டுமேற்றமே எப்படி யெனில் ஆரியத்தில் வேதமுண்டு தமிழில் திருக்குறளுண்டு எனும் பொருளை விளக்கிக்கொண்டு இவ்வெண்பா பிரகாசித்துக்கொண்டிருக்கிற தன் றோ. இச்செய்யுளாலும் மேலேகாட்டியஔவைப்பிராட்டியார்வெண் பாவினாலும் தமிழ்மறை மொழிகளாலும் ஆரிய வேதமும் தமிழ் வே தமும் ஒரே பொருளைக் கொண்டனவென்றே துணியப்படும்.

இதுநிற்க ஆரியர்களென்போர்சில ஆயிரவருடத்துக்குமுன் இத் தமிழ்நாட்டுக்கு வந்ததாகச் சரித்திரக்காரர்கள் கூறுகிறார்களெனவும் நம்நண்பர் சொன்னார்கள். ஆரியபதத்தை நந்திரு மந்திரத்திலும் ஸ்ரீ வாசகத்திலும் தேவாரத்திலும் சிவபெருமான் வாக்கென்று எடுத் தாண்டிருப்பதை மேலேபிரமாண பூர்வமாக வெடுத்துக்காட்டினோம் உமாதேவியார்க்குச் சிவபிரான் ஆரியமுந்தமிழுஞ் சொன்னாரென்றால் இந்நிகழ்ச்சி யெக்காலம் நடந்தேறியது இக்காலத்தைக்கண்டு பிடிக் கும் வகை எச்சூழ்ச்சியான் முடியத்தக்கது நஞ்சரித்திர வாராய்ச்சி யில்வா றிருக்கச் சரித்திரக்காரர் கூறுகின்றார்களென்று நம் நண்பர் சொற்றார்களே? சரித்திரக்கார் என்போர்யாவர் ஐரோப்பா கண்டத் துக் கிரிஸ்துமதத்தினராகிய மேலைநாட்டாரும் ஆங்கிலத்துடன் அவர் கள் சரித்திரமொழிய மற்றத்தெய்வீக சரித்திரத்தைக் கனவிலுங் கண்டறியாத நம்மவரிற் சிலரையுந்தானே? திருமூலநாயனார் நந்திபக வான் சீடர்களிலொருவர் இச்சிவயோகியார் திருவாவடு துறையின் கண் சிவாலயத்தில் முக்காலத்தும் விளங்கும் அரசமரநிழலில் 3000- வருடஞ் சிவயோகத் தமர்ந்திருந்ததாக நஞ்சைவ நூற்கூறுஞ் சரித்

திரத்தை யிச்சரித்திரக்காரர் அங்கீகரிக்கிறார்களா? சிவயோகத்திருந்த 3000 வருடமு முற்றுப்பெற்று நம்பிரானாகிய திருமூலநாயனார் ஸ்ரீ கைலாயத்துக்குப் பழயபடி யெழுந்தருளின தெக்காலம் திருமூலநாயனார் கைலாயத்தில் அகத்தியமுனிவரோடு நட்புப் பெற்றிருந்ததாக நம்சைவநூல் கூறுகின்றபடியால் பார்வதிதேவியார் திருமணத்துக்குமுன்னரே அகத்தியமாமுனிவரும் ,தவயோகியாரும் ஸ்ரீ கைலாய பர்வதத்தி லொருங்கு வீற்றிருந்ததாகவன்றோ கருதவேண்டி யிருக்கிறது ஆனதால் இக்கால வரைகளைக் குறிக்க வெத்தனிப்பது கடலலையைக்கணக்கிட ஆரம்பித்தது போலாம் ஆனதால் மாணிக்கவாசக சுவாமிகள் காலத்துக்குமுன்னரே திருமூலநாயனார் திருவாவடுதுறையின்கணிருந்து ஸ்ரீ கைலாய மெழுந்தருளினதாக நினைக்கக் கூடியதாயிருக்கிறது. மாணிக்கவாசகப்பிரபு காலத்தை மேனாட்டாரும் அவர் வழியொழுகும் நம்மவரும் பலபலவிதமாய்க்கண்டு கடைசியாய்சுமார் 1800-வருடத்துக்குமுன்னென்று கிரிஸ்து அப்தத்துக் கிணங்கக் கண்டுகொண்டிருக்கிறார்கள் இக்காலவரையறை நிதானமன்று அகத்தியமாமுனிவ ரியற்றிய மாணிக்கவாசக புராணமென ஒருநூல் வடமொழியிலுள கலியுகம் பிறந்த 20-ம்வருடத்தில் வாதபுரீஸ்வரர் குதிரைகொள்ள மதுராபுரியை விட்டுக் கீழச்சமுத்திரக் கரைக்குப் பிரயாணமானதாக இக்கிரந்தத்தில் கூறியிருக்கின்றது இது உண்மையெனச் சாதிக்க அநேகஞ்சான்றுகளுள். கலியுகம்பிறந்து இற்றைக்கு 5012 வருடமாயிற்றே நவீன மேனாட்டுச் சரித்திரக் கல்வியாளர் கண்டபடி 3200 வருடம்தான் ஆயிற்றே அவ்விவகாரம் இவ்விடம் வேண்டாம் ஆனாலோ மாணிக்கவாசக சுவாமிகள் காலம் இந்நாளும் கண்டபடிக் கல்லவென்பது மட்டும் திண்ணம். காலவரையைக் குறுக்கிக் குறுக்கிப் பார்த்தாலும் 3000 வருடங்களுக்கு முன்பே மாணிக்கவாசகர் காலமென்று சொல்லலாம்.

திரு சாம்பசிவம்பிள்ளை.

## விடுகதைக்குவிடை.

செவ்வாய்ப்பேட்டையில் வசிக்கும் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ-மான் கு. ஐயாக்கண்ணு முதலியாரவர்கள் வைகாசி மாதத்திய நம்செந்தமிழ்ச்செல்வம் 325-வது பக்கத்திற் கேட்டிருந்தவிடுகதைக்கு விடை

வெண்பா.

செந்தமிழ்ச்செல் வத்திடத்திற் செம்மலையாக் கண்ணுதுரை
தந்த விடுகதைக்குத் தக்கவிடை—யெந்த
விதமெனிலோ நீரில் விளையாடு நல்ல
முதலை யெனவே மொழி.

வே. முத்தணுசாரி, ஸ்டேஜ்மானேஜர்,
S. S. S. V. கம்பேனி, பழனிஸ்தலம்.

## தமிழ்மறை பஞுதித்வம்

(305-ம் பக்கத் தொடர்ச்சி.)

17. அனுபவப் பிரசித்தமாக 'தமிழ்மறை' தந்த 'தேவாரம்' என்னுந் தமிழாகம வேதகானம், மனதையுருக்கிக் கண்ணீர்க்கம்பலை யுண்டாக்குவதும், 'ஆரியவேத' கானம் அவ்வாறு பண்படுத்தாது நிற்பதும் காண்கின்றோம். 'தமிழ்மறை' ஓதும்முறைமைக்கும் இருபதுக்கு மேற்பட்ட வகையாக வகுக்கப்பட்டிருக்கும் நந்தமிழ் மறைப் பண்களுக்கும், தற்கால ஆரியவேத மோதுமுறைமைக்கும் ஆரியவேதசந்தத்துக்கும், யாதொரு பொருத்தமுஞ்சம்பந்தமுந் தென்படவில்லை.

நந்தமிழ் மறைபயின்று வந்த சிலர்களியாவரெனில், இப்போது கோயிற்குருக்கள்மார் என்று விளங்கும் ஆதிசைவரும்; கங்காபுத்திரர் என்றுவிளங்குஞ்சைவரும் மற்றசைவ வகுப்பாருமெனலாம். இவர்களிற் சிலவகுப்புபின்னிட்டு அசைவராய்த்தாழ்ந்தார், இச்சைவரைக் கொண்டை கட்டிகள். என்றும் தொண்டைமண்டலசைவ வேளாளர் என்றும் அழைப்பார்கள். இவர்கள் வியாபகம் தற்காலத் தமிழ் ஜில்லாக்களிலேதான் இத்தென்தேசம் பற்றியும் அவர்கள் 'தமிழுக்கு'த் தென்மொழி யென்று வழங்குவ தென்பார் சிலர் 'தேன்' (இனிய) மொழி 'தென்'மொழியாய்க்குறுகிற்றென்பர் சிலபெரியோர்.

## திருமுறை கண்டபுராணம்,

"மன்னனுக்கு நம்பிக்கு மறையவர் மூவாயிரவர்
பன்னரிய திருத்தொண்டர் பலதுறை யோர்க்குங் கேட்க
இன்னருண் முன்வியத்துறைத்த விவண்முதலாவிசைத்தவினைத்
தென்னலமேன் மிகத்தோன்றத் திருவருளாற் றேன்றியதாம்"

திருவருட்காரணமே 'தமிழ்மறை'யும் தேவாரமும், தென்தேசத்திலேயே விளங்கச்செய்தருளியது போலும்.'

"சொன்னட்டபாடைக்கு தொகை தொகையெட்டுக்கட்டளையாம்
இன்னிசையாற்றருந்தக்க தக்கராகத் தேழ் கட்டளைகளாம்
பன்னு பழந்தக்கராகப் பண்ணின் மூன்றுளதாம்
உன்னரிய தக்கேசிக் கோரிரண்டு வருவித்தார்"

"மேவு குறிஞ்சிக் கஞ்சு வியாழகுறிஞ் சிக்காறு
பாவுபுகழ் மேகராகக் குறிஞ்சிப் பாவிரண்டு
தேவுவந்த விந்தளத்தின் செய்திக்கு நான்கினிய
நாவில் புகழ்க் காமரத்தின் றன்மைதனக் கிரண்டமைத்தார்"

9. சீகாமரம்.

"காந்தாரமாகியபி யந்தையாங் கட்டளைக்கு
வாய்ந்தவகை மூன்றாக்கி வண்ணட்ட" ராகத்திற்
கேய்ந்தவகை யிரண்டாக்கிச் செவ்வழி யொன்றாக்கி யிசைக்
காந்தார பஞ்சமத்தின் கட்டளை மூன்றாக்கினார்."
கொல்லிக்கு நாலாக்கிக் கவுசிகத்துக் கூறும் வகை
சொல்லிரண்டாக்குமிகு தூங்கிசைசேர் பஞ்சமத்திற்
சொல்லியினி லொன்றாக்கிச் சாதாரிக் கொன்பதாப்
புல்லுமிசைப் புறநீர்மைக் கொன்றாகப்போற்றினார்"

"அந்தாளிக் கொன்றாக்கி வாகீசருந்தமிழின்
மூந்தாய பலதமிழுக் கொன்றொன்று மொழிவித்து
நந்தாய நேரிசையாங் கொல்லிக்கு நாட்டிலிரண்
டுந்தாடுங் குறுந்தொகைக் கட்டளையா விரித்துரைத்தார்."

"தாண்டகமாம் பாவுக்கோர் கட்டளையாத் தாபித்துத்
தாண்டகையார் தடுத்தாண்ட வையாரு டுய்யமுறைக்
கிண்டிசை சேரிந்தளத்துக் கிரண்டாக நிகழ்வித்தார்."

திருமறைக்காட்டுத் தலபுராணத்தில் பொற்கதவமடைத்து வைத்துப் போனதாகக்கூறும் வேதம் 'தமிழ்' வேதமே யென்றுவிளங்குகிறது தமிழ்வேத மல்லாது வேறாயிருந்தால் அதற்குக் கொடுத்தவரம் பொய்யாய் விடுங்கண்டீர் பரமசிவத்தின் வரம் பொய்யானது கண்டிலேம் பத்மாசுரன் வரத்தினின்றுதவற விளைத்தையனே சான்றளரியுரு தாங்கிய ஹரன் றகிக்கப் படுவானோ? படான் படான்.

"திருமறைக் காட்டிலிட்ட செய்யபொற்கத வந்தனைக்
திருமறை திரும்பிவந்து திறப்பதே திரமாக் கொள்ளில்
திருமுறைதிறக்கப் பெற்ற திவத்திறை செப்புவேதந்
திருமுறை யாகமங்காண் சிவனடி சேர்ப்பதாமே."

(இன்னும்வரும்.)

ஹர. ஷண்முகமுதலியார்.
சைவசித்தாந்தி, சேலம்.

## விடுகதைக்குவிடை

9—5—12-ல் வெளியான நமது அருமைச் "செந்தமிழ்ச்செல்"வத்தின் 325-வது பக்கத்தில் கண்டவிடுகதைக்கு கீழே அளித்திருக்கும்விடையைக்காண்க.

"முதலையார் கடல்சூழ் மண்டல மகட்கு மங்கலநாளெனவயங்கும், விதலையிற் செவ்வாய் பேட்டை மாநகரின் மேவிவாழ்ந்தொளிரையாக் கண்ணு, முதலியார் மொழிந்த விடுகதைக்கேற்ப மொழிகுவல்லிடையதே தென்னின், முதலையேயல்லாது வேறில்லை கல்விகளைமுழுதுணர்ந்த முதுவல்லோரே"

விடை? முதலை இவை மூன்று எழுத்துகளையும் வினாவிற்கண்டபடி முறை மாற்றிப் படிக்கிற் பலபொருள் புலப்படுவதைக்காணலாம்.

9—5—12-ல் வெளியானநமது அருமைச் "செந்தமிழ்ச்செல்"வத்தின் 331-வது பக்கத்தில்கண்ட "சத்தயாதர்பூஜாக்கணிதம்" என வினாவுக்கு கீழே அளித்திருக்கும் விடையைக்காண்க.

"தேனூற்று மலர்சோலை செறிபழனி முத்தபத்தர்
தானூற்ற பாவின் விடைதந்திடு வல்சத்தகன்னி
பூநோற்ற திருவடிக்கண் பூஜைசெய்ய முனம்பறித்தா
னூற்று முப்பத்து மூன்று நறுமலர்மாதோ."

தம்பிரான் நந்தவனத்திலிருந்து சத்த கன்னிகளுக்கும் அர்ச்சிக்கப்பறித்துக்கொண்டுவந்த பூக்கள் 433 தம்பிரான் ஒவ்வொரு கன்னிகளுக்கும அர்ச்சித்தபூக்கள் 252-இவையை 331-வது பக்கத்தில் "சத்தயாதர் பூஜாக்கணித" வினா என்று எழுதியிருக்கும் பதினறுபாசிரியவிருத்தத்தில சொல்லியிருக்கிறபடி செய்து பார்த்தால் விடை புலப்படுவதைக்காணலாம்.

## விடுகதைக்கு விடைவேண்டும்.

காலில்லா மாடொன்று கட்டுண்டிருப்பதைக்
கண்ணில்லான் காவல் காத்துக்கொண்டிருக்கக்
கையில்லான் பாலைக்கரந்து கொடுக்க
வாயில்லான் வாங்கி வயிர்நிறையவுண்டானே.

இவைகளில் யாதாமொரு பொருள், சொல், இலக்கணம் முதலிய குற்றங்களிருக்குமாயின் பிழைபொருக்கவேண்டுமாய்மித்திரரைக்கேட்டுக் கொள்கிறேன்.

T. V. RETHINAVELU PILLAI,
Channel Amin,
Brother of
V. A. RAMALINGAM PILLAI
Typist

25th Andar, street,
Trichinopoly.

**(பத்திராதிபவர்களுக்கு நிரூபம்.)**

*ஆசிரியவிருத்தம்*

*செந்தமிழ்ச் செல்வ பத்திராதிபர்*
*திரிசிரப்புரமதி லோங்கும்*
*சுந்தர நாதப் பண்டிதர்க் கன்பாய்*
*தொடுத்த தோர் நிரூப மோர்ந்து*
*அந்தமார் பழநி முத்தனு சாரி*
*யட்சர விடுகவிக் குறைத்த*
*உந்திய பொருளி லுறைபிழை நீக்கி*
*யுலகினில் வெளியிடு வீரே.*

## விடுகதைப் புலவரவர்களுக்கு

**விண்ணப்பம்;**

*ஆசிரியவிருத்தம்.*

*சீர்மலிப் பழநி பதிபொழி ஸ்ரீமான்*
*செல்வனு முத்தனு சாரி*
*ஏர்மலிப் புலவ ரவர்களிக் கெழுது*
*நிரூப மஃதனைப் பார்த்து*
*நேர்மலி யட்ச ராவதா னக்கதைக்*
*கிசைபொருட் டனிற்பிழை யுறினும்*
*சார்புடன் களைந்து தயையுடன் பிரதி*
*தந்திட வேண்டுகின்றேனே*

## (பொருட் கூறியகாலம்.)

**வெண்பா.**

*ஆர்கலிசூ ழும்புவியி லட்சார வதான*
*ஏர்கவிக் குத்தர மின்றுரைத்தேன்—பேர் பொலியும்*
*ஆண்டு பரிதாபி ஆடிமதி வையைந்தில்*
*ஈண்டிரன் டையெடுத்த வேல்*

*செந்தமிழ்ச் செல்வப் பத்திரிகையில் பழனிஸ்தலம்.* **S. S. S. V.** *கம்பெனி ஸ்டேஜ்மானேஜர் ஸ்ரீமான் வே. முத்தனுசாரியவர்கள் பாடிய அட்சாரவதான விடுகதை வினாவிற்கு விடை?*

**(கட்டளைக்கலித்துறை)**

*சீரார் பழநித் திருநகர் மேவுஞ் சிலம்பனடி*
*நாரார் மனங்கொண் டருட்கவி யாடி நனிபுகழு*
*மோரார் கவிவலன் முத்தனு சாரி விடுகதைக்கு*
*நேரார் பொருள்சுந் தரநாதம் பிள்ளை நியமமிதே.*

**(பத்தெழுத்துள்ள நண்பர் பெயர்.)**

(சுந்தரநாதம்பிள்ளை)

அட்சராவதான விடுகவிப் பிரகாரம் மேற்கண்ட நண்பர்பெயரில் அடியில்கண்ட நெம்பருள்ள எழுத்துக்களை சேர்க்க வரும் பதமும் அதன் பொருளும்.

5. 4. 7. நாசம் = அன்பு
3. 6. 7. தத்தம் = அகலம்
5. 7. நாம = அச்சம
6. 7. 8. தம்பி = அநுசன்
8. 4. 6. 7. பிரதம் = ஈகை
1. 4. 7. சுரம் = இசை
5. 3. 7. நாதம் = ஒலி
3. 4. 7. தாரம் = மலை
1. 2. 3. 4. 7. சுந்தரம் = அழகு
4. 6. 7. ரதம் = தேர்
5. 9. நாள் = தினம்
1. 4. 8. சுரபி = பசு
1. 3. 7. சுதம் = முறைமை
5. 8. நாபி = கொப்பூழ்
1. 4. 6. 7. சுரதம் = புணர்ச்சி
5. 10. நாளை = மற்றைநாள்
3. 2. 6. 7. தந்தம் = பல்
8. 1. பிசு = ஓராக்கன் பெயர்
3. 10. தளை = கால் விலங்கு
5. 4. 6. 7. நாரதம் = பதினெண்புராணத்தொன்று

## பத்திரிகை அனுப்பும்படி பாடியது:

### வெண்பா

இக்கு புகழ் பழநி க்ஷேத்திரத்தில் வீற்றிருக்கும்
தக்க புகழ் முத்தனு சாரியவர் — மிக்கபுகழ்
சுந்தர நாதநீர் சொல்பத் திரிகைமா
தந்தோறு மெற்கனுப்பத் தான்.

## பத்திரிகை வாழ்த்து.

### வெண்பா

செந்தமிழ்ச் செல்வம் செழிப்பாய்த் தினந்தோறும்
குந்த லிலாது நனிவாழ்க — எந்தை

அருள் புரிக வென்றே யடி வணங்கு மாசுந்
தாளுத னெண்ணம் போறுன்.

K. மூத்துசாமிஉடையார்,
எலிமெண்டரி ஸ்கூல் மானேஜர்,
பெரம்பலூர் தாலுகா } பாதாங்கி
திருச்சி, } கைகளத்தூர் போஸ்ட்.

## புத்தகவரவு,

**பதரிவனக்கும்மி:**—இஃது இலந்துறை என வழங்குகிற பதரிகாரண்ணியம் அல்லது வ்யாசாச்ரம மகிமையின் சுருக்கத்தைக் கும்மிப்பாவாற் கூறப்பட்டிருக்கிறது. இது இரண்டாங் கட்டளை கங்காதாக்குருக்களென்கிற மகா-ள-ள-ஸ்ரீ கங்காஜடேசசர்மா அவர்களால் இயற்றப்பெற்று விளங்குகின்றது. இது சொல்லினிமை பொருளினிமையோடு விளங்குகின்றது. இதன்விலை அணா ஒன்றே. இதனை எமது புத்தகசாலைக்கு அனுப்பிய இந்நூலாசிரியர் அவர்களுக்கு மிக வந்தனம்புரிகின்றேம்,

**அம்பிகாபதியின்சரித்திரம்:**—அம்பிகாபதி என்னும் அபிதானமுடைய இப்புத்தகம் கல்விக்கடலை முற்றுமுண்டு விளங்கிய தெய்வீகக்கவியும் கவிச்சக்கிரவர்த்திஎன்னும் பெயருமுடையகம்பநாட்டாழ்வாரின் குமாரராகிய அம்பிகாபதியின் சரித்திரத்தைக் கூறும் சிறந்த புத்தகம். இது அம்பிகாபதியின் சரித்திரத்தை இனிய தமிழில்விரிவாகவும் தெளிவாகவும் எழுதப்பெற்றிருக்கிறது இதனை இயற்றிய ஆசிரியர் இரங்கூன் மகா-ள-ள-ஸ்ரீ மூர்த்திமுதலியார் அவர்கள் இவர் பொது உபகார நலம்புரிவோரால் புகழத்தக்கதே இதன்விலை அணா 4 இந்நூலின் ஆசிரியர் எமது புத்தகசாலைக்கு இந்நூலைத் தந்த அன்புமேலீட்டைக் குறித்து பெரிதும்பாராட்டி வந்தனிக்கின்றோம். இப்புத்தகம் வேண்டுவோர் "நவீனகதா புத்தகசாலை" மாண்ட்கோமரி தெருவு, இரங்கூன். என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**தசகாரியவிளக்கம்:**—இப்பெயர்பூண்ட நூல் வைதிக சைவசித்தாந்த முறைக்கும் முன்னோர் நூல்களின்பாற் கண்ட அரும் பெரும் விஷயங்களைத் தெளிவுறுத்துமாறு எழுந்ததோர் சிறந்த நூலேயாம். இதனை இயற்றிய ஆசிரியர் திருமந்திர நகரமென்னும் தூத்துக்குடி சைவசித்தாந்தசபை உப அக்கிராசனாதிபதியும் மதுரைத் தமிழ்ச்சங்கத்து அங்கத்தினருமாகிய ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளை அவர்கள் இந்நூல் எல்லாவாற்றானுஞ் சிறந்ததொன்றாம். இதன் விலை அணா 8

இதனை எமது புத்தகசாலைக்குத் தந்தபேரன்பைப் பெரிதும் பாராட்டி இந்நூலாசிரியருக்கு வந்தனம் பல செலுத்துகின்றோம்.

பத்திராதிபர்.

## பலதேச வர்த்தமானம்.

**நீர்ப்பெருக்கறி விக்குங்கருவி:**—உலகத்திலுள்ள 700-துறைமுகங்களிலும் இரண்டு வருடத்திற்கு முன்பே கடல் நீரின் பெருக்கைத் தெரிவிக்கக்கூடிய கருவியொன்றை அமெரிக்கர் கண்டுபிடித்திருக்கின்றனர்.

**தேள் விஷத்திற்கு மருந்து:**—தேள்கொட்டியவுடன் கொட்டிய விடத்தில் சிறிது புளியையும் அதேயளவு சுண்ணாம்பையுங் கலந்து வெண்ணெய்போலாக்கித்தடவினால் விஷம் 5-நிமிஷத்திற்குள் இறங்கி விடுமாம்.

ஜப்பானில் இப்போதுள்ள ஜனங்களின் தொகை 5-கோடியாம் அங்கு பயிரிடும் பலங்களின் தொகை 12.700.000 ஏக்ராவாம்.

சிவகெங்கையிற் களவு அதிகமாக நடக்கிறதாம் சில சிலகொலைகளும் நடந்தனவாம் கொலையாளிகளைப் பிடித்திருக்கிறார்களென்றும் தெரிகிறது.

இந்துப்பூரிலிருந்து ஒரு நிரூபர் எழுதுகின்றார்:—

4-ந்தேதி வைசாகபட்டணத்திலிருந்து பெங்களூருக்குச் செல்லும் ரயிலில் ஒரு ஸ்திரீ இந்துப்பூரில் இரவு 2-30 மணிக்குத்தங்கி 4-மணிக்கு ஒரு பெண்குழவியைப்பெற்றாள் அவளை இந்து பூரிலிருக்கும் லோகல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டது அவ்விடத்தில் காலை 7-மணிக்கு மற்றொரு குழந்தையைப் பெற்றாள் மறுபடி டாக்டர் உதவியினால் 7-15 மணிக்கு இரண்டு குழவிகளை யீன்றாள். முதற்பிறந்த குழந்தை தவிர மற்றமுன்றுங் காலஞ்சென்றனஎல்லாம் பெண் குழந்தைகளே குழந்தைகள் யாவும் பூர்ண வளர்ச்சியுடனிருந்தன, தாயும் முதற் குழந்தையும் சௌக்கியமாயிருக்கின்றார்கள்.

சீமையிலிருக்கும் கலப்பை செய்யும் இஞ்சினீர்கள் வெகுதூர தூரத்திலிருக்கும் இந்தியா முழுமையும் போய்சுற்றிப்பார்த்து அச்சமண் நேர்த்திக்குத் தகுந்த கலப்பைகளை அமைக்கும்பொருட்டு பணச்செலவு செய்து அவரவர்கள் ஏஜெண்டை அனுப்பிக்கொண்டிருக்க நமது நாட்டிலிருக்கும் இஞ்ஜினீர்கள் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள் நாளெல்லாம் எப்போது நம்மவர்களுக்கு ஊக்கம் வருமோ தெரியவில்லை லண்டன் இஞ்ஜினியர் பத்திரிகை பரிதாபப்பட்டு எழுதுகிறது.

வீரியவிருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்பு படுத்துவத்தையும் திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான இரண்டு உயர்ந்த ரத்னவுஷதங்கள்

## மதன மஞ்சரி மாத்திரைகள்.

"நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும் ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை."

1. இவை ஜீரண சம்பந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2. இரத்தத்தை சுத்திகரித்து விருத்திசெய்து தேகத்திற்கு நல்லதிடத்தையும் மேனியையுங் கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்வித நரம்புத்தளர்ச்சியையும்நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண் எரிச்சலைப் போக்கடித்து மூளையைக்குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்து தருபவை

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கற்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## நபும்ஸகத்வாரி கிருத்

இக்காலத்தில் சாதாரணமாகவாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜனனேந்திரியநரம்புத்தளர்ச்சிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ. 1

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரியமுண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌவுஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள் ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள் ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கானநற்சாக்ஷிப்பத்திரங்கள் நாங்கள்கேட்காமலும்,கேளாமலும் அனுப்பி யிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழி காட்டியாகும்.

இங்கிலீஸ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில் வேண்டுமானாலும் இந்த புஸ்தகத்தை இனமாக தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன

## ராஜவைத்திய நாராயண்ஜி கேசவ்ஜி.

புரோப்ரைட்டர் ஆயுர்வேதோதய ஔஷதசாலா,

No. 177, சைனபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை

## செந்தமிழ்ச் செல்வத்தின்

## உள்ளூர்ச்சந்தாதாரர்களே! வெளியூர்ச்சந்தாதாரர்களே!

தயவுசெய்து சென்ற வருஷச் சந்தாவை யனுப்புங்கள், வருஷ ஒன்று கடந்தும் அனுப்பாதிருக்கலாமா? சென்ற வருஷச் சந்தா யெதிர் பார்க்கின்றோம்.

இனி இப்பொழுது பிறந்திருக்கும் இரண்டாவது வருஷச், தாவையும் உடன் கூட்டியனுப்பின் நலமே. அனுப்பா திருப்பி வி. பி. தபாலில் வரும், தயவுசெய்து திருப்பிவிடாது ஏற்று இந் முயற்சிக்குத் துணைசெய்வீர்களென்று நம்புகின்றோம்.

சென்ற வருஷச் சந்தாவை அனுப்பாதிருப்பின் சென்றவரு சந்தாவிற்கும் பிறந்திருக்கும் வருஷத்திற்கும் சேர்த்து வி. பி. த லில் அனுப்பப்படுமென்பதையும் அறிய வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

EMPIRE OF INDIA LIFE ASSURANCE Coy. (Ltd

**BOMBAY.**

Advantages: Purely Indian; Absolute Governme Security: Premiums lower than English or Foreig Companies; High Surrender Values; Loans 6%; Quic settlement of claims &c

Please Apply to:—

J. G. GNANADURAI,

S/o Mr. J. GNANAMUTHU, B. A.

Puthoor, Trichinopoly.

The Editor of the S. P. G. High School Magazin will be glad to send a copy of April Number to any Ol Student of the School on receipt of 2½ anna Stamps.

Subscription for next term (June to December) i **9** ans. including Postage.